**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.741/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மூக்கையா, வயது 42 |
| Father Name/Husband Name | : | ராமசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of August 2025.

**(Accused absent. 355 BNSS petiition filed and allowed.).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு மறவர் காலனியிலிருந்து வேலைக்கு சென்று விட்டு முத்துவீரன் என்பவரும், நானும் முத்துவீரனுடைய இருச்சக்கர வாகனத்தில் முத்துவீரன் ஓட்ட, நான் பின்னால் அமர்ந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தோம். மாலை 06.30 மணியளவில் லாயல் மில் சிறிய கேட் அருகே வளைவில் திரும்பி போய் கொண்டிருக்கும்போது பின்னால் வந்த திருமுருகன் மினிபஸ் வேகமாக வந்து எங்கள் வண்டியின் மீது மோதி விட்டது.அநத் வண்டியை ஓட்டிய நபரை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதால் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை. அதில் எனக்கு வலதுப்பக்க காலில் காயம் ஏற்பட்டது.

2 என்னுடன் வந்த முத்துவீரனுக்கு இடதுபக்க காலில் அடிபட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**3.** நான் காலை 09.00 மணிக்கு வேலைக்கு செல்வேன், வேலை முடிய மாலை 06.30 மணி ஆகும். எனது வீடு காந்திநகரில் உள்ளது. முத்துவீரன் வீடு அப்பனேரியில் உள்ளது. எனது வீட்டுக்கும், முத்துவீரன் வீட்டுக்கும் செல்வதற்கு கடலையூர் ரோட்டில் வந்து விடலாம் என்றால் சரிதான். சம்பவம் நேரத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் அக்கபக்கத்தினர் கூடிவிட்டார்கள். அனைவரும் பார்த்து வரகூடாது என்று எங்களை பார்த்து சப்தம் போட்டார்கள் என்றால் சரியல்ல. முன்னாடி சென்று நாங்கள் கீழே விழுந்தால் நானும், முத்துவீரனும் மயக்கமாகி விட்டோம் என்றால் முத்துவீரன் மட்டும் மயக்கமானார், நான் மயக்கமாகவில்லை. தகவல் சென்று போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. நான் மயக்கமாகவில்லை என்பதால் போலீசார் என்னிடம் புகார் வாக்கமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முத்துவீரன் ஓட்டுவதற்கு கற்றுக்கொண்டு ஓட்டுனர் உரிமம் எடுத்திருந்தால் இவ்வாறு விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் முதல் விசாரணையில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.